# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## அரையாண்டுத் தேர்வு - 2012 - 2013

## தமிழ்மொழி - வளர் தமிழ் 8

சுட்டெண்:........................................................ நேரம்: 180 மணித்துளிகள்

**1) சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. தமிழில் உள்ள முதல் எழுத்துகள்

அ) 18 ஆ) 12 இ) 30 ஈ) 247

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. தீந்தமிழ் என்பதைப் பிரித்தல்

அ) தீன் + தமிழ் ஆ) தீந் + தமிழ்
இ) தீ + தமிழ் ஈ) தீம் + தமிழ்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. ஐம்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா

அ) பொன்விழா ஆ) வெள்ளிவிழா
இ) வைரவிழா ஈ) பவளவிழா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. பண்டாரவன்னியன் எதிர்த்துப்போர் செய்தது

அ) ஆங்கிலேயரை ஆ) ஒல்லாந்தரை
இ) பறங்கியரை ஈ) போத்துக்கேயரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. போகின்றான் என்பதன் இடைநிலை

அ) கின்று ஆ) கிறு இ) போ ஈ) ஆன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. நூலை எடுத்துத் தாருங்கள். இதில் தோன்றாது நிற்பது

அ) எழுவாய் ஆ) தோன்றாச்செயப்படுபொருள்
இ) அடைமொழி ஈ) பயனிலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கார்காலம் வர வானம் கவிழ்ந்து கொட்டியது.

அ) மழை நீர் ஆ) ஆற்று நீர்
இ) ஊற்று நீர் ஈ) கடல் நீர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. பார் என்ற சொல்லின் பொருள்

அ) உலகம் ஆ) வானம் இ) காடு ஈ) நாடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. கற்றான் என்பதன் விகுதி

அ) அன் ஆ) ஆன் இ) ன் ஈ) றான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. பின்வருவனவற்றுள் இடைச்சொல்

அ) வா ஆ) உறு இ) சால ஈ) உம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. அதியர்மான் காட்டில் கண்ட மரம்

அ) கருநெல்லிமரம் ஆ) மாமரம்
இ) பலாமரம் ஈ) வேப்பமரம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. நீங்கற் பொருளில் வரும் இல் என்ற உருபு

அ) மூன்றாம் வேற்றுமை ஆ) இரண்டாம் வேற்றுமை
இ) நான்காம் வேற்றுமை ஈ) ஐந்தாம் வேற்றுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. ''ஓரகப்பை அன்னம் இலையில் இட ஊர் அடங்கும்'' இதில் அன்னம் என்ற சொல் குறிப்பது

அ) இடியப்பம் ஆ) சோறு இ) பிட்டு ஈ) தோசை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. கோட்டான் என்பது

அ) கொக்கு ஆ) பருந்து இ) ஆந்தை ஈ) வௌவால்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. ஞாயிறு என அழைக்கப்படுவது

அ) சந்திரன் ஆ) திங்கள் இ) கதிரவன் ஈ) நிலா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. பன்றியின் இளையது பறழ் என்பது போல சிங்கத்தின் இளையது

அ) குட்டி ஆ) கன்று இ) குருளை ஈ) பிள்ளை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. மெய்வல்லுநர்ப் போட்டியில் யாழ்ப்பாணம் முதலிடம் பெற்றது. இதில் வந்துள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ஆ) இடவாகு பெயர்
இ) காலவாகுபெயர் ஈ) சினையாகுபெயர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. பண்டைக்காலத்தில் தமிழர் ..................... அமைத்து தமிழ் வளர்த்தனர்.

அ) கலகம் ஆ) கழகம் இ) கல்லகம் ஈ) களகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. மலையும் மலைசார்ந்த இடமும்

அ) குறிஞ்சி ஆ) முல்லை இ) நெய்தல் ஈ) மருதம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. அன்னை பூபதி பிறந்த இடம்

அ) யாழ்ப்பாணம் ஆ) மட்டக்களப்பு

இ) மன்னார் ஈ) திருகோணமலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. தேன்மொழி விளையாடினாள் என்ற சொல்லியம்

அ) கலப்பு ஆ) தனி இ) கூட்டு ஈ)கூட்டுக்கலப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. காய்ந்து விட்ட இலையின் பருவப்பெயர்

அ) பழுப்பு ஆ) கொழுந்து இ) சருகு ஈ) தளிர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. மணிமேகலை என்ற காப்பியத்தின் ஆசிரியர்

அ) இளங்கோவடிகள் ஆ) நாதகுத்தனார்

இ) திருத்தக்க தேவர் ஈ) சீர்த்தலைச்சாத்தனார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. சொல்லிய உறுப்புகள்

அ) நான்கு ஆ) இரண்டு இ) ஆறு ஈ) ஐந்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. தழிழ்நாட்டில் ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடியவர்களில் ஒருவர்

அ) பண்டாரவன்னியன் ஆ) கயிலைவன்னியன்
இ) வீரபாண்டிய கட்டபொம்மன் ஈ) சங்கிலியன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. உன்னைப்போல் எனக்கும் வாழ்வில் உலகத்தார் உயர்வுகாணார் எனக்கூறியவர்

அ) பாவேந்தர் ஆ) உருத்திரமூர்த்தி
இ) சோமசுந்தரப்புலவர் ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. பாடிய என்பது

அ) வினையெச்சம் ஆ) பெயரெச்சம்
இ) வினைமுற்று ஈ) எதிர்மறை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. ககனம் என்ற சொல்லின் பொருள்

அ) வானம் ஆ) காடு இ) மலை ஈ) உலகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. ஆதிநாளில் கரும்பைக் கொண்டுவந்து விளைச்சல் செய்த மன்னன்

அ) அதியர்மான் ஆ) சேரமான்
இ) பாரி ஈ) குலோத்துங்கன்

அ) ☐ ആ) ☐ இ) ☐ ஈ) ☐

30. முப்பேரும் பெற்றாயே! எனக் காளமேகப்புலவர் கூறியது

அ) நீரை ஆ) மோரை இ) பாரை ஈ) காரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2 . பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.

கடற்கோளினால் கடலில் மூழ்கிப்போனது குமரிக்கண்டம். மூழ்கிய குமரிக்கண்டத்தின் மிஞ்சிய சிறு நிலப்பகுதியே தமிழகமும் இலங்கையுமாகும். இந்நிலப்பகுதியில் ஆதிகாலம் முதலே மாந்தன் வாழ்ந்து வருகிறான். முதன் முதலில் மாந்தன் தோன்றிய இடம் இக்குமரிக் கண்டம் தான். முதல் தோன்றிய மாந்தன் தமிழனே. இயற்கை ஒலிகளில் இருந்தே தமிழன் முதன் முதலில் பேசக் கற்றுக்கொண்டான். அவன் தன் முதல் ஒலியாக ‘அ’ வைக் கொண்டான். நாட்பட நாட்பட பெயர்ச்சொற்களை உருவாக்கினான். இன்று ஆயிரக்கணக்கான மொழிகள் தோன்றி மறைந்தாலும் என்றும் இளமையுடன் நிலைத்து நிற்கின்றது எம் தாய் மொழியான தமிழ் மொழியாகும்.இத்தகைய சிறப்பு வாய்ந்த எம்மொழியை என்றென்றும் காத்து அதன் தனித்தன்மை அழியாது பாதுகாக்க வேண்டும். எதிரி நம் இனத்தையும் எம் மொழியையும் அழிக்க முழுமூச்சோடு செயற்படுகின்றான். இதைத்தடுத்து எம் இனத்தையும் எம் மொழியையும் பாதுகாக்கவேண்டியது புலம்பெயர் தமிழ் இளையோர்களின் தலையாய கடமையாகும்.

1. புலம் பெயர் தமிழ் இளையோரின் தலையாய கடமை என்ன?

___________________________________________

___________________________________________

2. முதன் முதல் மாந்தன் தோன்றிய இடம் யாது?

___________________________________________

___________________________________________

3. எதனால் குமரிக்கண்டம் கடலில் மூழ்கிப்போனது?

___________________________________________

___________________________________________

4. தமிழன் முதன் முதல் எவ்வாறு பேசக்கற்றுக்கொண்டான்?

___________________________________________

___________________________________________

5. தமிழன் தனது முதல் ஒலியாக எதைக் கொண்டான்?

___________________________________________

___________________________________________

புள்ளிகள் 10

### 3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.

1. தைப்பொங்கலின் வேறு பெயர்கள் எவை?

2. "தூதில் வென்று வருவதற்கு முன்னே இதைத்தின்று சுவைத்திடுக" இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது.?

3. முல்லை மலரின் செருக்குக்குக் கவிஞர் கற்பிக்கும் கரணியம் என்ன?

4. வரலாற்றுப் புகழ்பூத்த வன்னியின் இரு மன்னர்களும் யாவர்?

5. தமிழரின் வீரம், கொடை, மானம் பற்றிக் கூறும் நூல் எது?

6. முத்தமிழ் என அழைக்கப்படுபவை எவை?

7. காளமேகம் என்றால் என்ன?

புள்ளிகள் 10

**4) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

சிரிக்கத் தெரிந்த உயிரி மாந்தன்
சிரிக்க ஏனோ மறுக்கின்றான்
எதற்கும் கலங்கித் தவிக்கின்றான்
எடுத்ததெற்கெல்லாம் அழுகின்றான்
பகுத்தறிவு உள்ள உயிரி அவன்
பயந்து பயந்து சாகின்றான்
எது வந்தாலும் எதிர்த்து நிற்க
ஏனோ அவனும் தயங்குகிறான்
விண்ணுக்கும் அவனே செல்கின்றான் ஆனால்
வீண் வேலைகளும் அவனே செய்கின்றான்
மண்ணில் ஒன்றாய் வாழ்வதற்கு
மறந்து போனான் மாந்தனவன்
பறவைகள் ஒன்றாய்ப் பறக்கின்றனவே
பார்க்க அழகாய் இருக்கின்றனவே
பாரினில் மாந்தனும் சேர்ந்து வாழ்ந்தால்
பகையே இல்லாது பறந்து போகுமே !

1. எப்படி வாழ்ந்தால் பகை பறந்து போகும் என்று கூறப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

2. சிரிக்கத் தெரிந்த உயிரி எது?

______________________________________________

3. பார்க்க அழகாய் இருப்பது எது?

______________________________________________

4. மாந்தன் எதற்கு மறுப்பதாகக் கூறப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

5. எதை மாந்தன் மறந்து போனான்?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண வினா - விடை தருக.

1. செயப்படுபொருள் இடம்பெறுமாறு இரண்டு சொல்லியங்கள் எழுதுக.

___________________________________

___________________________________

2. 'உண்டாள்' என்ற வினைமுற்றின் பகுதி, விகுதி, இடைநிலை, என்பவற்றைத் தருக.

பகுதி ____________________

இடைநிலை ____________________

விகுதி ____________________

3. தரப்பட்டுள்ள மரபுத் தொடர்களின் பொருள் விளங்குமாறு சொல்லியங்கள் எழுதுக.

மட மட ___________________________________

பாடிப்பாடி ___________________________________

4. தரப்பட்ட தனிச் சொல்லியங்களைக் கூட்டுச் சொல்லியமாக மாற்றி எழுதுக.

கிளி மரத்தில் இருக்கிறது.
கிளி பழத்தைக் கொத்துகிறது.

___________________________________

___________________________________

5. ஆகு பெயர்கள் எத்தனை வகைப்படும்? காலவாகு பெயருக்கும் பொருளாகு பெயருக்கும் எடுத்துக்காட்டுகள் தருக.

___________________________________

___________________________________

___________________________________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**நாங்கள் ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்குச் செல்வதற்கு பல வகையான உந்துகளைப் பயன்படுத்துகிறோம். மிதியுந்து, சிற்றுந்து, விண்ணுந்து, பேருந்து, நீருந்து என்பன கூடுதலாகப் போக்குவரத்தில் பயன்படுத்தப்படுகின்றன. நடத்தல் சிறந்த உடற்பயிற்சி. இது எங்கள் உடலைப் பலப்படுத்துகிறது. அத்துடன் பணத்தையும் சேமிக்க உதவுகிறது. இன்று மிதியுந்தைப் பயன்படுத்துவோர் தொகை கூடிக்கொண்டு வருகிறது. இப்போது முன்பை விடக் கூடுதலான மிதியுந்துகளை வீதிகளில் காணலாம்.**

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

★ பண்டாரவன்னியன்

★ தமிழுக்குத் தந்த கனி என்ற பாடலை உமது உரைநடையில் எழுதுக.

★ பனிகாலம்

புள்ளிகள் 20